சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௪.] 1915ஹ நவம்பர்மீ [பகுதி ௧௧.

## மைத்திராயணீ யோபநிஷத்து.

மூன்றும் பிரபாடகம். (தொடர்ச்சி)

இச்சரீரம் மைதுனத்தாலேயே உண்டானது. அசேதனம் நரகமென்று சொல்லக்கூடிய மூத்திர மூலத்தால் வெளிவந்தது. என்புகணிறைந்தது, மாமிசத்தாற் பூசப்பட்டது, மலம் மூத்திரம் பித்தம் கபம் மச்சை மேதை வசை முதலியவைகளாலும் வேறனேக மலங்களாலும் பரிபூரணமாய்த் திரவிய நிறைந்த பொக்கிஷம்போன்றது.

சம்மோகம் பயம் துக்கம் நித்திரை சோம்பல் விரணம் ஜரை ஒய்வு தாகம் கார்பண்யம் கோபம் நாத்திகம் அஞ்ஞானம் மாத்சரியம் கரணங்கள் குறைதல் மூடத்தன்மை இலச்சையில்லாமை நிந்தித்தல் கர்வம் நடுநிலையில்லாமை என்ற தாமச குணங்கள் கூடியும், திருஷ்ணை சினேகம் ஆசை லோபம் இம்சைஅதிர்ப்தி திருஷ்டி முயற்சி ஈருஷியை தன்னிச்சைவழி நடத்தல் சபலம் கவருதல் பொருள் தேடல் மித்திரனைக் காத்தல் பரிக்கிரக மெய்தல் இந்திரியார்த்த துவேஷம் பற்று என்ற இராசச குணங்கள் கூடியும், இவைகளாற் கட்டுண்டு இப்பூதாத்மா பலரூபங்களைப்பெறுகின்றான்.

## நான்காம் பிரபாடகம்.

ஒ பகவானே! உமக்கு நமஸ்காரம் நீர் எங்களை அனுக்கிரகிக்க வேண்டும்; வேறுகதியில்லை, இப்பூதாத்மாவிற்கு அதிதியெவன், எவனுலிதனை விட்டு ஆன்மாவிடத்திலேயே சாயுச்சியத்தை யடைவன்.

மகாநதிகளில் அலைகளைப் போலுள்ள விவர்க்கு முன்கன்மமானது நிவர்த்தமாயுள்ளது, சமுத்திரத்தின் தீரத்தைப்போலக் கடக்க முடியாதது. இவனுக்கு மிருத்துவியல் வரவு, கெட்டது நல்லதுமான கர்மங்களின் பலபோகங்களான பாசங்களால் பசுவைப் போலக் கட்டப்படும் கட்டிலகப்பட்டதைப்போல சுதந்தரமிராது, எமன் இராச்சியத்திலுள்ளதைப்போல வெகுமயமான அவஸ்தையைப் பெற்றிருக்கும். கட்குடித்தவனைப்போலப் பாசவாசனைக் கள்ளால் மயங்கும், பாபக்கிரகத்தால் பிடிப்பட்டதைப்போலச் சுழலும், பெருநாகந்தீண்டினுற்போல ஆபத்துக்களால் வருந்தும். இருட்டி லகப்பட்டதைப் போல ஆசையிற் சிக்கும், இந்திரசாலத்தைப்போலமாயாமயமாகும், சொற்பனத்தைப் போலப் பொய்யாம். வாழைத் தண்டினைப்போலச் சாரமற்றிருக்கும் கூத்தாடியைப்போல வேஷமுடையதாம், சித்திரச் சுவர்போன்ற பொய்யழகுடையதாம், சத்தபரிச முதலிய எவ்விடங்களிளுளவோ அவையனர்த்தங்களா யிருக்கின்றன, எவைகளிடத்து ஆசைவைத்த பூதாத்மா பரமபதத்தை நினைப்பதில்லை.

இவனல்லவோ இப்பூதாத்மாவின் பிரதிநிதி, இவனுக்கு ஞானமுண்டாகும் வழி எதுவோ அது சுவதர்மத்தை யனுசரிப்பது, தனதாச்சிரமங்களிலேயே இருப்பது, சுவதருமமே எல்லாவற்றையும் கொடுக்கும், ஸ்தம்பமும் கிளைகளுமாம் மற்றது இதனால் ஊர்த்துவ தேசத்தை யடைவான், இல்லாமற்போனால் கீழேவிழுவான், சுவதர்மமென்பது எது வேதங்களில் சொல்லப்பட்டதோ அது சுவதருமத்தைக் கடந்தவன் ஆச்சிரமியாகமாட்டான். ஆச்சிரமங்களி லுள்ளவனே தபசி எனப்படுவான், தபசு இல்லாதவனுக்கு ஆத்மஞானமுண்டாவதில்லை, கர்மசித்தி யுண்டாகாதெனச் சொல்லப்பட்டது, தபசினால் சத்துவங்கிடைக்கும், சத்துவத்தால் மனங்கிடைக்கும் மனதால் ஆத்மாகிடைப்பான், ஆத்மாகிடைத்தால் நிவிருத்தியில்லை.

எங்ஙனம் கொளுத்தக்கட்டையில்லாத பொழுது நெருப்புத் தன்காரணத்திலேயே ஒடுங்குகின்றதோ அங்ஙனம் விருத்தியொழிந்தபொழுது சித்தம் தன்காரணத்திலேயே ஒடுங்கும்.

மனமானது சத்தியத்தை யபேட்சித்து இந்திரியார்த்தங்களில் மயங்காமல் தன்காரணத்தில் வயித்தால் கர்ம வசத்தைப்பற்றி வந்தவை எல்லாமகிருத்தங்களாகும்.

சித்தமே சம்சாரமாதலால் அதனைப் பூரண யத்தினத்தினால் சோதிக்கவேண்டும், சித்தமெந்தவழியிற் போகுமோ அங்ஙனமே (புருஷனுவான்) இது நித்தியமான அவசியம்.

சித்தத்தின் பிரசாதத்தால் சுபாசுபங்களான கன்மங்களைத் துலைப்பான். தெளிவடைந்த ஆத்மா ஆத்மாவிடத்தே யிருந்து அட்சயமான சுகத்தைப் பெறுவான்.

பிராணிகளுக்கு விஷயத்தி லெவ்வளவு ஆசையுண்டாகின்றதோ அவ்வளவு பிரமத்தினிடத்து உண்டானால் எவன் பந்தத்தை விட்டு மோட்சத்தை யடையமாட்டான்.

மனமென்றது சுத்தமென்றும் அசுத்த மென்றும் இருவகை. அசுத்தமென்பது காமசங்கற்ப முடையது. சுத்தமென்பது காமமில்லாதது, மனதை லயம் விட்சேபமிரண்டும் இல்லாததாகச் செய்து எப்பொழுது அமனஸ்கயோகத்தைப் பெறுகிறானோ அப்பொழுதே பரமபதம் கைகூடும். எதுவரையில் இருதயத்தில் லயத்தையடையுமோ அதுவரையிலேயே தடுக்க வேண்டும், இதுவே ஞானமும் மோட்சமும். மற்றவெல்லாம் கிரந்த விஸ்தாரங்களேயாம்.

சமாதியினால் சமஸ்தமலங்களுந் துலைந்து ஆத்மா வினிடத்தே வைக்கப்பட்ட சித்தத்தின் சுகம் ஏதுண்டோ அது வாக்கால் வர்ணிக்க முடியாது அப்பொழுதே தன்னாலேதன் னந்தக் கரணத்திலே கிரகிக்கப்படும்,

எங்ஙனம் ஜலத்தில் ஜலமும், அக்கினியில் அக்கினியும், ஆகாயத்தில் ஆகாயமும். (வேறாக) காணப்படுகிற தில்லையோ அங்ஙனம் ஆன்மாவினிடத்துச் சித்தம் லயிக்கும்பொழுது புருஷன் காணப்படுகிறதில்லையோ அங்ஙனம் ஆன்மாவினிடத்துச் சித்தம் லயிக்கும் பொழுது புருஷன்காணப்படுகின்றான்,

மனதே மனிதர்களுக்குப் பந்த மோட்சங்களுக்குக் காரணம், விஷயத்தைப்பற்றியது பந்தத்திற்கும், விஷயத்தை விட்டது மோட்சத்திற்கும் ஏதுவாம்.

நீ பிரம்மா, நீயே விஷ்ணு, நீயே உருத்திரன், நீயே பிரஜாபதி நீ அக்கினி, வருணன், வாயு, நீ இந்திரன், நீ சந்திரன், நீ மனு, நீ யசசு, நீ பூமி, நீ அச்சுதன், சுவார்த்தமாகவும், சுவாபாவிகார்த்தமாகவும், அநேகரூபனாய் ஆகாசத்திலிருக்கிறாய், விசுவேசர உனக்கு நமஸ்காரம், வசுவசுரூபன், விச்சுவகன்மாவைச் செய்பவன், விசுவத்தைச் செய்பவன், விசுவமாயை யுடையவன், நீ விசுவகிரீடையிலாசையுள்ள பிரபு, சாந்தாத்மா வாகிய உனக்கு நமஸ்காரம், பரமரகசியனும், சிந்திக்கக் கூடாதவனும், அப்பரமேயனும், ஆதியந்தமு மில்லாத உனக்கு நமஸ்காரம்,

தமசு ஒன்றேயாயிருந்தது. அதுபரனால் பிரேரிக்கப்பட்டு விஷமாச்சுது, இதுவேரஜசின் ரூபம், அந்தரஜசு பிரேரிக்கப்பட்டு விஷமமமாகியது, அது சத்துவத்தின் ரூபம், அச்சத்வம் பிரேரிக்கப்பட்ட அதில் ரசம் வெளிவந்தது, அந்த அம்சமே சேதனமாத்திரன் புருஷர்கள் தோறும் க்ஷேத்திரஞ்ஞன் ஸங்கல்பம் அத்யவஸாயம் அபிமானம் இவைகளைத்தனக்குக் குறியாயுடையவன், பிரஜாபதி,

அவருக்குப்பிரமா, ருத்திரன், விஷ்ணு என்று ஆதியிலுண்டான சரீரங்கள் சொல்லப்படும், இனி எது தானவருடைய ராஜசாம்சமோ அதுவே பிரமாவாம், எது தானவருடைய தாமசாம்சமோ அதுதான் ருத்திரனும், எது தானவருடைய சாத்வீகம்சமோ அதுதான் விஷ்ணு.

இவனன்றோ ஒருமூர்த்தியாய் மும்மூர்த்தியாய் அஷ்ட மூர்த்தியாய் பதினொரு மூர்த்தியாயுள்ளவனாய் பனிரண்டு மூர்த்தியாயுள்ளவனாய் அளவிலா மூர்த்தியாயுள்ளவனாய்க் காணப்படுவன். காணப்படுதலால் பூதங்களிற் சஞ்சரிப்பான், எல்லாப் பூதங்களுக்கும் இருப்பிடமுமதிபதியுமாம் அவ்வாத்துமாவே உள்ளும் வெளியு முள்ளவன்.

மணவழகு.

—):o:(—

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆலய வழிபாடு.

தொகுதி 4, பக்கம் 214 தொடர்ச்சி.

ஆதிசேஷன் விஷ்ணுமூர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டு அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ் செய்து அவருடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு கைலயங்கிரியைக்கு வடபாற் சென்று அவ்விடத்தில் பரமேஸ்வரனை நோக்கி அரியதவம் செய்து கொண்டிருந்தனன். கைலாசபதி பிரமனைப்போல உருவெடுத்து ஆதிசேஷனுக்கு முன்தோன்றினர் ஆதிசேஷன் அங்குக் காட்சி தந்தவர் பிரமதேவரெனவே நினைத்து நமஸ்கரித்தனன். பிரமதேவர் ஆதிசேஷனை நோக்கி "நீ இது காறும் சரீரம் வருந்தச் செய்த தவத்தை மெச்சினேன் உனக்கு வேண்டியது இந்திராதியோகங்களோ? அல்லது நம்முடைய சாலோக முதலிய பதங்களோ? அல்லது அஷ்டமாசித்திகளோ? உனக்கு எது தேவை" என்றனர்.

ஆதிசேஷன் பிரமதேவரை நோக்கி "சுவாமி! எனக்கு வேண்டியதைக் கொடுக்க கைலாசபதி ஒருவரேயன்றி, ஏனையோரல்லர். ஆகையால் உம்மால் எனக்குக் கிடைக்கத்தக்க தொன்றுமில்லை" என்றான். பிரமனாய் வந்தசாம்பவமூர்த்தி ஆதிசேஷனுடைய பக்திக்கு மிக்க வியந்து உடனே விருபாரூடராய் காட்சிதந்தருளினர். ஆதிசேஷன் மிகவும் பயந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வேதவாக்கியத்தால் ஸ்தோத்திரஞ் செய்து, தான்பகவானுடைய மகிமை தெரியாமல் பிரமதேவரென்று நினைத்து உதாசினமாய் பேசிய குற்றத்தை க்ஷமித்தருள வேண்டுமென்றும், தன்னபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

"ஓ! அன்பனே! நீ வியாகூலப்படாதே. நீ என்னுடைய நடன தரிசனத்தைக்காண அபேட்சித்திருப்பதால், மேருமலைக்குத் தெற்கே சமுத்திரதீரத்தில் தில்லைவன மென்றோர் ஆரணியமுளது; ஆங்கு

வியாக்ரபாதர் என்னும் பக்தன் அநேகநாளாக சுயம்புமூர்த்தமாகிய திருமூலநாதருக்கு நித்திய ஆராதனை செய்துகொண் டிருக்கின்ருன். நீயும் உன் ஆயிரம்பணாமுடிகளை மறைத்து ஐந்து முடிகளுடன் அத்திரிமகாரிஷியின் பத்தினியாகிய அநுசூயா தேவியினிடமாகப் பிறந்து பதஞ்சலி என்னும் நாமதேயத்தைப்பெற்று, தில்லைவனம் அணுகி, வியாக்கிரபாதருடைய நேசத்தைக்கொண்டு திருமூலநாதரை அருச்சித்து வருவையாயின் தைமாதம் பூசநட்சத்திரம் குருவாரம் கூடிய குருபுஷ்ய புண்ணியதினம், மத்தியானகாலத்தில் சமஸ்ததேவர்களுடன் பிரசன்னமாய் நீயும் அவ்வியாக்கிரபாதரும் காணும்படி தரிசனம் கொடுப்போம்" என்று பரமேஸ்வரன் சொன்னதும் ஆதிசேஷன் ஆனந்தமடைந்து, பின்னும்பகவானை நோக்கி, "சுவாமி! அடியேன் தில்லை வனத்திற்குச் சர்ப்ப ரூபத்தோடு போகும்போது வழியில் கருடனால் உபத்திரவம் சம்பவிக்காமலிருப்பதற்கு ஓர் மார்க்கம் அருள் செய்யவேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

சாம்பவமூர்த்தி அங்கு ஒரு பிலத் துவாரத்தைக்காண்பித்து நீ இப்பிலத்துவாரத்து வழியாகச் செல்லுவாயாகில் அவ்வனத்தையடைவாயென்று சொல்லித் திருவுருக்கரந்தனர். ஆதிசேஷன் ஐந்து சிரசுடன் அநுசூயாதேவியின் புத்திரனாய்ப்பிறந்து, பிலத்துவாரத்து வழியாக நுழைந்து பாதாள மார்க்கமாக தில்லைவனத்தையடைந்து, அங்குத் தவஞ்செய்துக் கொண்டிருந்த வியாக்கிரபாதரைக்கண்டு அவருக்கு நமஸ்காரஞ் செய்தனர்.

ஐந்து சிரசுடன் தன்னைப்பணிந்தவர் இன்னாரென்று வியாக்கிரபாதருக்குத் தெரியாமையால் ஆச்சரியமடைந்து அவருடைய வரலாற்றை வினவினர். பதஞ்சலியார் நடந்தசவிஸ்தாரத்தைச் சாங்கோபாங்கமாய் மொழிந்து பரமேஸ்வரன் இத்தில்லை வனத்தில் ஆனந்த நடனதரிசனத்தைக் காட்டப்போகின்றமையால் அதுவரையிலும் வியாக்கிரபாதருடன் திருமூல நாதரை வழிப்பட்டு வரும்படி ஆக்கியபித்ததைச் சொன்னமாத்திரத்தில் வியாக்கிரபாதர் ஆனந்தமடைந்து பதஞ்சலியாரைக் கட்டித்தழுவி திருமூலநாதருடைய சந்நிதிக்கழைத்துக் கொண்டுபோய், திருமூலநாதரைத் தரிசிப்பித்து, பின் தன்னாச்சிரமத்துக்கு அழைத்துச் சென்றனர்,

வியாக்கிரபாதர் தான் பிரதிஷ்டைசெய்து பூஜித்து வரும் வியாக்கிர பாதேஸ்வரர் என்னும் சிவலிங்க மூர்த்தியை பதஞ்சலிக்குக் காட்டி அவ்விலிங்க மூர்த்திக்குப் பூஜைசெய்யச் சொல்லினர், பதஞ்சலி அவ்வாறே துதித்துப் பிறகு அவ்வாச்சிரமத்துக்கு மேற்கில் அநந்த தீர்த்தமெனத்தன்பேரால் ஒருதீர்த்தமுண்டாக்கி அதன் தீரத்தில் அநந்தேஸ்வர ரென்னும் ஒரு சிவலிங்க மூர்த்தியை ஸ்தாபித்து, அம்மூர்த்தியைப் பூஜித்துப்பிரதிதினமும் வியாக்கிரபாதருடன் சிவகங்கையில் ஸ்நாநஞ்செய்து திருமூலநாதர், வியாக்கிர பாதேஸ்வரர், அநந்தேஸ்வரர் ஆகிய மூர்த்திகளையும் பூஜித்துக் கொண்டு நடனதரிசனத்தைக்காணத் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

முனிவர்களிருவரும் இவ்விதஞ் தவஞ்செய்து கொண்டிருக்கையில், ஆங்குவந்த சிலமுனிஸ்ரேஷ்டர்களால் அவ்விடம் ஒரு ஞான சபை யுண்டென்று சொல்லக்கேட்ட வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும் அவ்வெல்லையைச் சித்தத்திலுலே நமஸ்கரித்து, அவ்விடம் சென்று ஆனந்த நிருத்தத்தை ஞானத்திலுலே வணங்கிப் பாவனுதரிசனத்திலுலே தேகம் புளகிக்க எண்ணிறந்த நாட்களைப் போக்கினுர்கள்.

முன் கைலாசகிரியில் பதஞ்சலிமுனிவருக்கு நடனதரிசனத்தைக் காட்டுவதாக பரமசிவன் சொல்லியிருந்த புண்ணியதினம் சம்பித்த படியால் வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும் அதிக ஆவலுடன் அத்தரிசனத்திற்கு யாதொரு விக்கினமும் நேராதபடிக்கு அத்தினத்திற்கு முந்தினதினம் விநாயகருக்குப் பூஜைசெய்து நடனதரினத்திற்காக எதிர்பார்த்திருந்தனர். மறுநாள் குருவாரம் பூசநட்சத்திரம் சித்தயோகத்தில் சகல ஆன்மகோடிகளுக்கும் சுபசகுனங்கள் உண்டாகவும், ஆகாயத்தில் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கவும், அங்கு நடனதரிசனத்தின் பொருட்டு வந்திருந்த மூவாயிரம் பிரமரிஷிகளுடன், தேவர், தானவர், யக்ஷர், கின்னரர், கிம்புருடாதிகள் தோத்திரஞ் செய்யவும் பிரவணசொரூபியாகிய பரமசிவன் தன் ஜோதிஸ்வரூபத்தைப் பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் கண்டு தரிசிக்கும்படி

யான ஞானதிருஷ்டியை அவர்களுக்குக் கடாட்சித்து ஏனையோர்க் கெல்லாம் அவரவர் பரிபாகத்துக்குத் தக்கபடி கண்டு தரிசிக்கும்படி யான திருஷ்டியைக் கொடுத்து யாவரும் காணும்படியான ஒருஜோதி தோன்றியது. அச்சோதியின் மத்தியில் பரமேஸ்வரன் சிவகாம சுந்தரியுடன் திவ்வியாபரணாலங்காரத்தோடு பேரி, மிருதங்க, வீணை வேணு தாளவாத்திய கோஷத்துடன் ஆனந்தத்தாண்டவஞ் செய்தனர். இந்த நடன தரிசனத்தைச் சமஸ்த தேவர்களும், ரிஷிகள் முதலிய யாவருங்கண்டு பிரம்மானந்தத்தில் மூழ்கினர். பரமேஸ்வரன் பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களுக்கு அவரவர் கோரியவரங்களை யளித்தனர். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். பரமேஸ்வரன் தேவர்களை நோக்கி "பிரஞானமானது நமக்கு விளங்கப்பட்ட அதிஷ்டானமாம், நம்மிடத்தில் பிரிவின்றி ஒன்றானது சித்தும் சத்துமாயு முள்ளது. அச்சொரூபம் அமரப்பட்ட இப்பூவுலகைத்தைவிட்டு அகலாதது. எவ்வாறெனில், உடலில் உட்பட்டிருக்கும் உயிரினிடத்தில் எவ்வாறு ஞானசொரூபமா யிருக்கின்றோமோ, அப்படியாகவே யிருப்போம். ஆகையால் இந்த இடத்தைச்சுற்றி அம்பலமாக்க கோலுங்கள்" என்றார்.

"ஞானநமக்குத் திகழ்விடநம்மிற் பிறிவின்றொன்
றானதுசித்துச் சத்தமர்ஞாலத் தகலாது
தானுடலுட்பட்டு முயிரிற்றங்குதல் போல்போம்
வானவர்சுற்றிக் கோலுமினென்றான் மன்றாடி"

(இன்னும்வரும்.)

தி-அரங்கசாமி நாயுடு,
லிகிதர்-சைவசித்தாந்தம் மகாசமாஜம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நால்வர்முத்தி.

இவ்வுலகத்தில் பொய்யமணை யடக்கி நமது சைவசமயத்தை நிலை நாட்டியருளிய காழிவேந்தரென்னும் திருஞானசம்பந்த சுவாமிகள், சமணரால் கல்லிற்கட்டிக் கடலிற் போடப்பட்ட அஞ்ஞான்றுதா மெப்பொழுதும் ஐந்தெழுத்துப்புணைப்பற்றிக்கடக்கின்ற உண்மையை உலகமறிவான் வேண்டி நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளிய திருநாவுக்கரசு சுவாமிகள், முன்கயிலாயத்தில் வாக்கருளியவண்ண மிறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற திருநாவலூரரென்னும் சுந்தரமூர்த்திசுவாமிகள், திருப்பெருந்துறையில் குருந்தினீழலில் அடியார் சூழத்தொடுவீற்றிருந்து ஆகமாந்தமென்னுஞ் சித்தாந்த உண்மைப் பொருள்களை யிறைவனாலுபதேசிக்கப்பெற்ற திருவாதவூரரென்னும் மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சமயாசாரியர்களாகிய இவர்கள் யான்கூறிய நால்வராவார்.

இனி முத்தியின் பொதுவியல்பு:—முத்தி, வீடு என்பன ஒரு பொருளன. ஆணவபந்தத்தினின்று விடுத்தலேவீடாம். அநாதியே உயிருடன் சகசமாய்ச் சார்ந்துநின்ற இவ்வாணவ மலத்தின் பலவித சக்திகளை யிறப்பில் தவங்களென்னுஞ் சிவபுண்ணியத்தாற் கெடுத்து இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமெய்திச் சிவஞானத்தாற் சிவப்பேறு ஆன்மா வெய்தும்.

எவ்வாறெனில், காட்டக்காணு மியல்புடைய கண்ணிந்திரியத்துக்கு உயிர் அத்துடனின்று பொருளினைக்காட்டுதல் மாத்திரையேயன்றி, உடன்சென்று அவ்வுருவைக் காணுதலுஞ்செய்து உபகரிக்குமாறுபோல் உயிர்க்கு முதல்வன் உடனின்றறிவித்தல் மாத்திரையேயன்றி அவ்வுயிருணர்வோடு கூட அத்துவிதமாய்ச்சென்று அவ்விடயத்தை யறிதலுஞ்செய்து உபகரித்துவரும். காரியம் ஒழிந்தாற் சுத்

தனுதுவோனுகிய ஆன்மா இவ்விதஉபகாரத்தை யறியப்பெறின், அம் முதல்வன் திருவடிகளைத் தலைப்படுதற்கண் இச்சையிடையறாது நிக ழும் அறிவு இச்சை யிரண்டும் ஒத்து அத்துவிதநிலையொன்றே பற்றி முதல்வன் திருவடிக்கண்ணவாய் ஒருங்கு நிகழவே காயம் ஒழிந்தபின் மலநீங்கிச் சுத்தனாய் நிற்குமுறைமை காயத்தோடு நிற்புழிக்கைகூடப் பெறுதலால், ஏனைக்கிரியையுமே யெல்லாமலங்களையும் நீத்து அவ்வறி விச்சைகளோடு ஒருவழிக்கொண்டு செங்கமலத் திருவடியைக் கூடப் பெற்று மாறுபடாத சிவாநுபூதியே சுவாநுபூதியாகக்கொண்டு வாழ் தல் ஜீவன் முத்தர் நிலையாம். இவர்கள் சிவஞானத்தாற் சிவத்தை நோக்கி யன்பு செய்யப்பெற்றுச் சிவமே கண்டுகொண்டிருப்பர். அன் றியும் இவ்வத்துவித முத்திநிலையின் தன்மையை ஆன்றோர்கள் பல செய்யுட்களாற் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தலென்னும் அழ கொடு கூறுவாராயினர். உதாரணமாக,

ஞானசுகாதீத வெண்பா.

சுத்தனே ஞானச் சுடரே கருணையுறு
நித்தனே நின்னுடனா னிற்பதுவை—பெத்தத்தில்
உன்னறிவி னுனிருந்த வுண்மைபோன் மாணவகா
வென்னறிவி னீயு மிரு.

சிவபோகசாரம்.

இந்தனத்தி லங்கி யெரியுறுநீர் தேனிரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண்—சந்ததமும்
அத்துவித மாவதுபோ லான்மாவு மீசனுமாய்
முத்தியிலே நிற்கு முறை.

இஃதன்றியும் இவ்வத்துவித முத்தியைத் தாடலை யென்னும் வார்த்தையில் டகரத்தை ஓரெழுத்தென்றுவது ஈரெழுத்தென்றுவது கூறமுடியாமல் ஒன்று மின்றி இரண்டு மின்றி ஒன்றிரண்டுமின்றி அத்துவிதமாய் நிற்றலையும் உவமையாக எடுத்துக்கூறுவர். மேற் கூறிய முதற்செய்யுளில் உயிரியல்பு சிறிதுந்தோன்றாது, இறைவனது வியாபகத்துள் ஆன்மாவடங்கிநிற்கு முறைமையையும், பின்னையசெய் யுளில் அத்துவிதமாய்நிற்குந் தன்மையையும் மற்றதோருவமையில் இருபொருள் புணர்ந்து நிற்கு மாற்றையுங் கூறினும். இம்முத்திநிலை யில் ஆன்மா மதுவுண்ட வண்டே போல் நிற்பனென்றும் இறை

வன் "கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே" என்றும், ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். இவ்வித அரிய பெரிய முத்தியே சித்தாந்த முத்தியெனப்படும். இம்முத்தி யெய்துதற்கு மேற்கூறப்பட்ட இறப்பில் தவங்களென்னுஞ் சரியை கிரியை யோகங்களைச் செய்துழிச் சன்மார்க்கமென்னும் ஞானங்கைகூடும். மேற்கூறிய இறப்பில் தவங்களாகிய சிவபுண்ணியங்கள பதினாறு வகைப்படும். அவை சரியையிற் சரியை, சரியையிற்கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம், யோகத்திற்சரியை, யோகத்தில்கிரியை, யோகத்தில்ஞானம், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்பன.

இச்சிவபுண்ணியங்கள் உபாயமென்றும் உண்மை யென்றும் இருவகைப்பட்டு நின்று, உபாயம் புகழையும் உண்மை பத்தியையும்பற்றி நிகழும். இவற்றுள் உபாயம் ஒவ்வொன்று நந் நான்காகி முன்னையதுடன் சேர்ந்து (32) ஆகுவர். உபாயச்சரியையிற் சரியை முதல் 16-வகைச் சிவபுண்ணியங்களுக்கும் காலாக்கினி ருத்திரர் புவன முதல் குணதத்துவ மஸ்தகத்தில் ஸ்ரீ கண்ட புவனத்தின் கீழுள்ளருத்திரருன அவ்வப்புவனபதிகளுலகத்தில் சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுதலே பயனும், உண்மையிற் சரியையிற் சரியை முதல யோகத்தில்ஞானம் வரை (12) வகை சிவபுண்ணியங்களுக்கு ஸ்ரீ கண்டபுவன முதல் சுத்தவித்தைக்குங்கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சாலோகமுதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மையில் ஞானத்திற் சரியை முதல் மூவகைச் சிவபுண்ணியங்களுக்குச் சுத்த வித்தை முதலிய அதிகாரதத்துவம் போக தத்துவங்களில் வைகும் மந்திர மந்திர மஹேசர் முதலியோர் புவனத்துச் சாலோக முதலிய முத்தியைப் பெறுதலாம். எஞ்சி நின்ற ஞானத்தில் ஞானம் ஒன்றுக்கே பரமுத்தி சித்திக்கும், ஏனையவற்றிற்கு லயதத்துவ அபரமுத்திகிட்டும். பதமுத்திகட்கு மீட்சியுண்டு ஆனல் சுத்த வித்தை முதலிய தத்துவ புவனங்களிலெய்தி னோர்க்குப் பரமுத்தி தலைப்படுமேயன்றி மீட்சியில்லையாம். இனி அவ்வச் சரியைக்கேற்ப அவ்வப்புவனபதியுலகங்களிலெய்தி அகத்தொண்டர்யோலத் தடையின்றி யியங்கிப் போகங்களை நுகர்வது சாலோகபதவி. இச்சரியை தாசமார்க்கமெனவும் படும். அவ்வக்கிரியைக்கேற்ப அவ்வப்புவனபதி

களிலெய்தி மைந்தர் போல அநுக்கராய் வைகிப் போகநுகர்வது சாமீபம் இக்கிரியைப் புத்திரமார்க்க மெனவும்படும். அவ்வவ்யோகத்திற்கேற்ப அவ்வப்புவன பதியுலகங்களிற் சென்று புவனபதிகளோடொத்த வடிவும் அணியும் போகநுகர்ச்சியும் பெற்றுத் தோழர் போலுரிமை கொண்டு வாழ்வது சாரூபம். இவ்யோகமார்க்கம் சகமார்கமெனப்படும், மேற்கூறிய சரியை முதலிய வற்றிற்குரிய சாலோக முதலியன அவாந்தரப் பயன்களாம். ஞானமொன்றுமே அவற்றினுண்மைப்பயனும். இந்த ஞானத்தாலேயே சாயுச்சியம் வந்தெய்தும். இதுகாறும் கூறியவற்றால் இறப்பில் தவமினைய வென்பதும் அவற்றாலெய்தும் பயன் இனையவென்பதும் முத்திநிலை யின்ன தென்பதும் விளங்குமாறு ஒருவாறு சுருக்கிக் கூறினும். இனி நால்வர் முத்திப் பேற்றைக்கூறுவாம், அங்ஙனங் கூறுதற்குமுன் ஞானத்திற் சரியை ஞானத்திற் கிரியை ஞானத்தில் யோகம் ஞானத்தில் ஞானம் என்னும் நான்கு படிகளையும் விளக்கி மேற்செல்வாம்.

ஞானத்திற் சரியை சூக்குமவுடலின் தன்மையும் அவ்வுடலின் கண்புசித்த புசிப்பும் கண்டு பின் தூலத்திற் கூடின முறைமையினின்று (36) தத்துவமும் சுத்தமாகிறதாகக் கண்டு நிற்றலாம் (2) ஞானத்திற் கிரியை ஞானபூஜை செய்தலாம். (3) ஞானத்தில் யோகம் பஞ்சாக்ஷரம் அடைவிலோதுதலாம். ஞானத்தில் ஞானம் பஞ்சபூதப்பழிப்பு முதல் பரமானந்த வசம்வரை முப்பது அவசரங்களிலும் நின்று சிவஞானத்துளழுந்துதலாம், இனி இந்நால்வகைப் படியினுள் நால்வர்களில் ஒவ்வொருவரும் எவ்வப் படிகளினின்று எவ்வகை முத்தியெய்தினர் என்பதைப் பற்றியாராய்வாம், திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணத்தை யருளிச்செய்த சேக்கிழார்பெருமான் திருவருள்பெற்று எல்லாம்வல்ல இறைவன் உலகெலாமென்று முதலெடுத்துக் கொடுக்க அங்ஙனந்தொண்டர் புராணம் அருளிய விஷயம் உலகெலா மறிந்ததொன்றே. அவர்வாக்கிறு ல்ருள்வதெல்லாமிறைவனு லருளியதற் கொப்பாமே யன்றிவேறன்று, ஏனெனில் அவனருள் பெற்றவர் அவன்வசநின்று மொழிகுவராதலின் அவ்வாறு நம்சேக்கிழார் பெருமான் மூவர்தம் முத்தியைக் கூறியாங்குக் கூறுவதேமிகச் சால்புடைத்து. அவ்வாறன்றித் தத்தங்கொள்கைவெவ்வேறிருந்து மனம்போனவண்ணம் அஃதிப்படித்தா னிருத்தல்வேண்டும் இஃதிப்படித்தான் முடிந்திருத்தல் வேண்டுமென்னுஞ் செருக்

குடன் கூறுவார் கூற்றெல்லாம் ஜீவபோத நிலையேயன்றிச் சிவபோத நெறியின் கண்ணதன்று. சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுள்ள இவர்கள் கூற்றைக்கொள்ளவா? அல்லது சிற்றறிவிற் பேரறிவு நட்டபெருந் திருவாளர் கூற்றைக்கொள்ளவா? யாதோரையமுமின்றிப் பின்னையர் சார்பிலேயே சார்ந்து அவர்கூற்றையே கொள்ளல் வெண்டும் இவ் வகையாராய்ச்சியாற் போந்ததியா தெனின் அருண் மொழிமழை பொழிதேவர் கூற்றையே கொள்ளத்தக்கது மற்றையர் கூற்றுத்தள்ளத் தக்கது. இதுநிற்க.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

### முத்திநிலையை ஆராய்வாம்.

கவுணியர்கோனாகிய நமது ஆளுடைய பிள்ளையார் கலியாணப் பந்தரில் தமது தேவியைக் கைப்பிடித்த அப்பொழுது (மந்திர மறையாலுய்த்த எரிவலமாக) இந்த இல்லறவொழுக்கம் வந்து தமியேனைச் சூழ்ந்ததே யென்றுவெறுத்து, இத்தேவியாரோடு எழுவாயுமீறு மில்லாச்சிவன்றாள் சேர்வனென்னும் ஆசையானது மீதூரத் தொண்டருறவினர் குழாம் புடைசூழ அளவற்ற மெய்ஞ்ஞானத்தின் எல்லையையடையுங் குறிப்பால் உலகத்தின்கண்ணுள்ள எவ்வகைச்சார்பும் தன்னைவந்து சாராதபடி நீங்கிச் சிவனோடிரண்டறக் கலத்தல் வேண்டித் திருக்கோயிலை நோக்கிப்போந்தனர். திருப்பெருமணமென்னும் ஆக்கோயிலினுள் போந்த திருஞான சம்பந்தர் தலைப்படுஞ் சார்புநோக்கி அவர் தமக்கு முன்னாள் ஞானப்பா லூட்டியாண்ட அப்பண்பின் பயன்கூட நல்லுணர்வு நல்க "கல்லூர்ப்பெருமணம்" என்றெடுத்துத் திருப்பதிகம் தீதறு பிறவிப்பாசந்தீர்த்தல் செம்பொருளாக் கொண்டு நாதனே நல்லூர்மேவும் பெருமண நம்பனேயுன, பாதமெய்ந்நீழல் சேரும்பருவமீதென்று பாடத்தேவர்கள் தேவனாகிய சிவபெருமான் திருவருள் புரிந்து முழுச்சுடர்த்தாணுவாகி நீயும் உன்தேவியும் உன் மணத்தில்வந்தார் யாவரும் இச்சோதியுள் வந்தெய்துக என்று அருள் புரிந்து அச்சோதியுள் ஒருவாயிலை வகுத்துக்காட்ட அப்புகலிப்பிரானும் நமச்சிவாயத் திருப்பதிகம்பாடி ஞானமெய்ந்நெறிதான் யார்க்கும் அச்சொல்லே யென்று வற்புறுத்திக்கூறி யீனமாம் பிறவிதீர மணத்தில் வந்தார் யாவரும் அச்சோதியுட் புகுகவென்னப் புகுந்த பின்னர் காதலியைக் கைப்பற்றிக்கொண்டு வலஞ்செய்தருளித், தீத

கற்ற வந்தருளுந்திருஞானசம்பந்தர், நாதனெழில் வளர்சோதிநண்ணியதனுட்புகுவார், போதநிலைமுடிந்த வழியெனக்கூறுமாற்றால், போதநிலைகள் பலவுளவென்று மவற்றினுளெல்லாஞ் சென்று சென்று கீழுள்ளனவற்றைக் கழித்து மேல் நிலையெய்தி முடிந்தபின்னர், சிவத்தினுட்புகுந்து இரண்டறக்கலந்து அத்துவிதமாய் நிற்பார் என்னுங்கருத்துத்தோன்றப்புக்கு ஒன்றி உடனானார்என்று பொருளாற்றலைச் சொல்லாற்றலி லமைத்து அருளிச்செய்வா ராயினர். ஆகவே நாதனெழில் வளர்சோதி நண்ணிய அக்காலத்தும் ஆன்மபோத நிலைகள் உண்டென்றும் அந்நிலைகள்யாவும் முடிந்தவழியே அத்துவிதப்பேறென்றுங் கண்டாம், அவ்வான்மபோத நிலைகளிற் சிற்சில கூறுவாம்.

சிவத்தினுள் ஆன்மா அடக்குதற்குற்றபோது போதங்கொள்ளுதல் ஒருநிலை. இதற்கு இரும்பையுங் காந்தத்தையு முவமை கூறுவர். பின் ஆன்மபோதத்தை அடக்கல் இரண்டாவது நிலை, இதற்கு ரசகுளிகையையும் பொன்னையுமுவமை கூறுவர் போதவடிவை மறைத்தல் மூன்றாவது நிலை, இதற்கு உப்பையும் நீரையும் உவமைகூறுவர். ஆன்மபோதத்தைக்கெடுத்துச் சிவபோதமாக்குதல் நாலாவதுநிலை, இதற்கு அனத்தையுந் துரும்பையு முவமை கூறுவர். ஆன்மபோத மேலிடாது வைத்தல் ஐந்தாவதுநிலை, இதற்கு அக்கினியின்ஒளியையும் சூரியனதுஒளியையும் உவமைகூறுவர். ஆன்மபோதத்தைத்தன் வசமாக்கிக்கலத்தல் ஆறாவதுநிலை, இதற்குக் கண்ணொளியையுங்கதிரொளியையு முவமைகூறுவர். இவ்வாறுசிவபோதம் ஆன்மபோதத்தை யடக்கி நின்று தான்மேலிட்டுத் தன்னுருவப் பரப்பையெல்லாங்கொடுபுகுந்து இவன்பாலே பதிப்பன். இதுகாறும் போதநிலைகளையும் அவைது முடிந்த வழிப்புக் கொன்றுதலையும் ஒருவாறு சுருங்கக் கூறினும். ஆதலால் அச்சோதியிற் புகுந்த காலத்தும் இப்போத நிலையெல்லாம் முடிந்து அத்துவித மெய்தினரென்பது பெற்றும். நமது சுவாமிவடிவொடு சோதியிட் புகுந்தனராதலின் இவர் ஞானத்தில் யோகநிலையில் நின்றவரென்று கொள்ளல் வேண்டும். ஆனால் ஈண்டு அந்நிலை புக்கபின்னரே உடனானரென்பது தெளியநின்றமை காண்க. ஞானத்தில் யோகத்திற் கிலக்கணம் பஞ்சாக்ஷரத்தை அடைவிலோதுதலென்று கூறினும். அது பற்றியன்றோ நமது சுவாமிகளின் வானமு நிலனுங்கேட்க நமச்சிவாயத் திருப்பதிகத்தை

அருள் செய்தனர். "மெய்ப்பொருளாவது நாதனுமநமச்சிவாயவே" என்பது தெளிதல் இத்தெளிதலே ஞானயோகக்குறியாம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

இனி ஆளுடையரசின் முத்திநிலை கூறுவாம். சேக்கிழார் பெருமான் கூறியருளிய வண்ணம் இந்நாயனார் கடைசியாகச் சென்றிருந்த தலம் திருப்புகலூராம். அத்தலத்திற்குளிவர் முத்தியெய்தினர். அத்தலத்திற் சென்றிருந்த காலத்தும் உழவாரத் திருப்பணியே செய்ததாக விளங்கக் கிடக்கிறது. இந்நாயனார் உழவாரத்திருப்பணியை மிக முக்கியமாகச் செய்தவரானதினால் அதனையே அடிக்கடி வியந்து கூறுவாராயினர். ஆனால் மனமொழி மெய்களென்னு மூன்று வழியாலும் திருப்பணி செய்வதில் பின்னிட்டவரல்லர். அஃது அடியிற் கூறப்படும் தொண்டர் புராணச் செய்யுளால் நன்கு விளங்கும். "மையற்றுறையேறி மகிழ்ந்தலர் சீர்வாகீசர் மனத்தோடு வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி செய்வராய் விரவுஞ் சிவசின்னம் விளங்கிடவே யெய்துற்ற தியானமருவுணர்வு மீறின்றி யெழுந்திருவாசகமுங் கையிற்றிகழும் முழவார முடன் கைக்கொண்டுகசிந்து கலந்தனரே.

இந்நாயனார் அதிதீவிரபக்குவ விசேடத்தால் சகளநிட்களமாகிய சூக்குமவடிவதனை யுள்ளும் புறம்பும் விதித்தவாறே வழிபட்டனரென்பது பெற்றும். அங்ஙனம் வழிபடுதலையே கிரியையாகக் கூறல் சாலும். இனிச்சிவஞான பாஷ்யத்தில் கூறியாங்கு ஞானத்திற்கிரியை சிந்தித்தலாம். மஹாஞானிகளும் ஞானத்தை யடைந்த போதிலும் மற்றையருய்யும் வண்ணம் கீழுள்ள தொண்டுகளையும் ஞானிநாலினுக்கு முரியனென் றருளிய வண்ணம் செய்யாதொழியார். அன்றியும் அன்புருவாகிய இந்நாயனார் இறைவனது மெய்யருள் தானெய்த வருமந்நிலைமை யணித்தாகச் சிலநாள் திருப்புகலூரில் அமர்ந்திருந்தார். அப்பொழுது "தன்னுடைய சரணான தமியேனைப்புகலூரான், என்னையினிச் சேவடிக்கீழிருத்திடு மென்றெழுகின்ற, முன்னுணர்வின் முயற்சியினாற் றிருவிருத்தம் பலமொழிந்தார்". அன்றியும் புகலூரிலெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானைநோக்கிப் "புண்ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன்" என்னுந் திருத்தாண்டகத்தைக் கூறியருளினார். அத்தாண்டகத்தில் முதற்பாசுரத்தால் "எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனோ வெம்பெருமான் றிருவடியே யெண்ணினல்லால்" என்றருளிச்செய்திருப்பதால் ஞானத்திற்கிரியை சிந்தித்தலென்பது நன்கு

நாட்டப்பட்டது. அன்றியுமிதனை யாதரித்துச் சேக்கிழார் பெருமானும் மன்னிய வந்தக்கரணம் மருவுதலைப்பாட்டினால் என்றருளிச்செய்வாராயினர். இனிமுத்திநிலை கூறுமிடத்து 'நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, யண்ணலார் சேவடிக்கீழாண்டவர செய்தினார்'' என்னுஞ் செய்யுளில் சிவானந்த வடிவேயாகி யென்று கூறுமற் சிவானந்த வடிவாகி யென்று கூறப்பட்டுளது. ஞானமென்பது ஈண்டு இறைவனது ஞானசத்தி. சிவானந்த ஞானமென்பது இறைவனது இன்பசத்தி. இது இறைவன் மாட்டு நின்றுவரும் சுகப்பிரபையாம். அது துகளறுபோதம் "மாமணியிற்சோதிமலர்ந்த பிரபைபோல்ஆமரன்றன்பாலேயது''. இது சுகரூபமென்றுந் தலைப்பின்கீழ்வருகின்றது ஆதலினாற்றான் சிவானந்த ஞானவடிவெனக் கூறப்பட்டது. அதற்கு மேல் சுகப்பேறு அல்லது சிவப்பேறு முதலிய பலநுணுகிய நிலைகளுமுள்ளன, அவைஇடையீடின்றி ஒன்றின்பினொன்றாய் நிகழும். இதுகாறுங் கூறியவாற்றால் இன்னாயனா ரடைந்தமுத்தி சிவானந்த ஞானவடிவேயாம் என்பது பெற்றாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்.

இந்நாயனார் திருக்கைலாயத்தில் வள்ளல்சாத்து மதுமலர்மாலையும் அள்ளுநீறு மெடுத்தணைவார். அவர்பெயர் ஆலாலசுந்தரர். முதல்வன்றனக்கு மலர்கொய்திட நந்தவனச்சூழலிலே சென்றபோது அநிந்திதை கமலினியென்னு மிருசேடியர்மாட்டு இச்சை வைப்பாராயினர். அஃதறிந்த இறைவனும் தென்புவிமீதுதோன்றி அம்மெல்லியலாருடன் இன்பநுகர்வாயென ஆலாலசுந்தரரும் அஞ்சலியஸ்தராய் உனது திருவடியை நீங்குஞ்சிறுமையேன் மையல்மானுடயாக்கையால் மயங்கும்வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்யென அங்ஙனம் இறைவர் அருள்செய்வாராயினர். இவர் அவ்விச்சையை நிறைவேற்றுதற்கு மாத்திரம் இவ்வுலகத்திற்கு வந்தவரேயன்றி வேறன்று. அவர்முன்னிருந்தவிடம் சுத்தசாலோக மென்னும் சிவசாலோகமாம். இங்குப் போகத்தி லிச்சையுடையரேல் பிறவிக்கு வரவேண்டுவதும் ஆசையிலரேல் மேலான நிலைகளையடைய வேண்டுவதும் என்பது மிகக்கவனிக்கத்தக்கது. ஆனால் இந்நாயனார் மீண்டுங் கைலாயமெய்தி ஆலாலசுந்தரராய்ச் சிவகணநாதர்க்குந் தலைவராய் நின்றனர். அங்ஙனம்நின்று முன்னை நல்வினைத் தொழிலியற்றுவாராயினர், என்று பெரியபுராணங்

கூறுமாற்றால் இவர்மீண்டுஞ் சிவசாலோகத்தை யடைந்தனரென்பது பெற்றாம், ஆனால் இவர் மானுட யாக்கையோடு கைலாயத்திற்குப் போனதாகவில்லை, ஏனெனில் "அங்கணேரொளியாயிர ஞாயிறு,பொங்குபேரொளிபோன்று முன்றோன்றிடத், துங்கமாதவர் சூழ்ந்திருந்தாரலா, மிங்கிதென்கொலதி சயமென்றலும்,"

"அந்தி வான்மதி சூடிய வண்ணல்தாள்
சிந்தி யாவுணர்ந் தம்முனி தென்றிசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்றோண்டன்
எந்தை யாரரு ளாலணை வாலென." உபமந்நியுபகவான்

கூறுமாற்றாலுணர்க. இதனை "ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே" என்ற தேவாரமு மாதரிக்கின்றது. ஈண்டு ஊனைவேறு செய்தலாவது பூதசரீரம்விட்டுத் திவ்யதேஜஸோடு கூடிய சுத்தசரீரம்பெறுதல், உயிர்வேறு செய்தலாவது, மானுடயாக்கையின் மயக்கம்விட்டுச் சிவபோதமேலிடல், சிவசாலோகத்துக்குமேல் வேறு சாலோகங் கிடையாதாதலால் இவர் மேலான சாலோகநிலையை யடைந்தனர் என்பதாயிற்று. அந்நிலையினின்றும் மேலான நிலைகளையடைதல் சாலும். இதுகாறுங் கூறியவாற்றால் சுத்தசாலோக நிலை இந்நாயனாரடைந்தன ரென்பது பெற்றாம். இதுவே ஞானத்திற் சரியையாம். இதுகேட்டலென்னும் ஞானபூசையுள் அடங்கும், இதனை ஐயனே தடுத்தாண்டருள் செய்யெனக் கேட்டமையாலுணர்க.

## திருவாதவூரடிகள்.

இச்சுவாமிகளைநோக்கித் தில்லைவாழந்தணர்கள், "தில்லையிலெம்பெருமானைச் செப்பியவித்தமிழ் மாலை நல்லவரும் பொருள்கூறவேண்டுமென நவின்றார்கள்" உடனே சுவாமிகளும் கனகசபைக்கெதிரே போய் இதற்குப்பொருள் சொல்வேன் என்று சொல்ல யாவரும்பின் சென்றார்கள். "ஒன்றிய வித்தமிழ்மாலைப் பொருள் இச்சபாநாயகரே யென்றுரைசெய்து மன்றதனிற் கடிதேகிமறைந்தன" ரென்று வாதவூரர்புராணமும், "ஈசனதடிக்கீழெய்தி யீறிலாவறிவானந்த, தேசொடு கலந்து நின்றா" ரென்று திருவிளையாடற் புராணமுங்கூறும். ஈண்டுச் சிவஞானத்தையே ஈசனதடியென்று கூறப்பட்டது. சிவஞானத்தை யெய்திய பின்னர் அதனுள் உள்ளொளியாயும் அந்தமாதிக ளில்லாததாயும், பேரறிவோடுகூடிய ஆனந்த மயமாயுமுள்ள தேசொடுகலந்து

நின்றுபென்பதால், இவரெய்திய முத்திஞானத்தில் ஞானத்தாலுறும் பரமுத்தியேயாம்

துகளறு போதம், "உற்ற பரமானந்தத் தொன்று யதிலுறங்கி போதம் முற்றுவதே முத்திமுடிவென் றுரைக்கு" மென்றுகூறியிருத் தலால் இவரெய்தியமுத்தி முடிந்த முத்தியாம். இவரடைந்த பேற் றிற்கு மேலடைவதோர் பேறில்லை. அத்துவித முத்தியிது வேயாம். இந்நிலையை யாருமறிதற் கரிதாம் மெய்ஞ்ஞான விளக்கத்தில், "அறி யார்களுமறியார் மிக வறிவார்களுமறியார், அறியார்களு மறிவார் களு மொன்றேருதமிலன்று, மறியார்களும் பசுபாசமென்னிருளான் மறைந்தறியார், அறிவார்களும் பரமானந்த வொளியானிறைந்தறி யார்" சுவாமிகள் பத்தியினுல் மறவாதேத்தலாகிய சதாநிஷ்டையி னுல் இறைவனது ஸ்ரீபாதத்தை யடைந்தவரெனக் கொள்க. அது "முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப், பத்திநெறியறிவித் துப்பழவினைகள பாறும்வண்ணம், சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட, அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே." இந்நிஷ்டையே ஞானத்தில் ஞானம்.

இதுகாறுங் கூறியவாற்றுல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஞானத் திற்சரியையில் நின்றுழிச் சுத்தசாலோகபதவியும், திருநாவுக்கரசுசுவா மிகள் சுரூபமென்கின்ற நிலையையும், திருஞானசம்பந்த சுவாமிகள் மேற்கூறியாங்குப் பலவிதபோத நிலைகள் முடிந்த விடத்துப் புக்கு ஒன்றி அத்துவித நிலையெய்திஞு ரென்பதையும், மாணிக்கவாசக சுவா மிகள் அறிவானந்த தேசொடு கலத்தலாகிய பரமுத்தியெய்திஞுரென் பதையும் வெள்ளிடைமலைபோல் விளங்கக்கண்டாம். இவ்வாறுசொல் லியதெல்லாம் இறைவனுர் திருவருள்பெற்ற ஆன்றோர்வாக்கியங்களை வைத்தே ஒருவாறுவிளக்கிக் கூறினேனேயன்றிவேறன்று. இவ்விளக் கத்திற்கு மறுதலையான அபிப்பிராயமுடையார் சிலர் இருக்கினுமிருக் கலாம். அவர்கள் உண்மையீதெனவிறுவரேல், அதுசுருதியுத்தி யனுப வத்துக்கு ஒத்ததாயிருப்பின் அங்கிகாரஞ்செய்து அவர்களுக்கு வந் தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்,

S. பால்வண்ண முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அவிரோதவுந்தியார் விசாரம்.

"தோல்வியும் வெற்றியும் சொன்மதங்கட்கெலாம்
கால பேதத்தினுண்டுந் தீபற
கருத்தன் செயலதென் றுந்தீபற."

(இக்காலத்தில் இதனால் அது தோல்வி யடைந்ததென்றும், அக்காலத்தில் அதனால் இது தோல்வி யடைந்ததென்றும் சமயங்களாறும் காலபேதங்களின் ஒன்றுக்கொன்று வெற்றி தோல்வி யடைதல் உண்டாதலின் அவற்றை நிறுவியவொருபரனது இச்சையால் தெய்வத்தன்மை கொண்டு எக்காலத்தில் எதை உயர்த்தி எதைத்தாழ்த்தல் வேண்டுமோ அதை அங்ஙனஞ் செய்குவது ஒழிந்து மற்றோர் காலத்தினுள்ளே ஓர்மதத்தை ஒருவராலும் வாக்குவாதத்தினாலே செயித்தல் கூடாது எனவும், "இறைவிதன் முலைப்பாலயின்ற சீகாழிக்கிறைவனு மிறைவனைப்பரிமே, னறைமலர்ப்பொழில்சூழ் மதுரை யம்பதியினடத்திய வொரு பெருந்தவனும், புறநிலைச் சமண மாதியைச் செயித்தார் பொருந்து தெய்விகத்தெனி லெவரே, மறைசொல்சட்சமயத் தொன்றுகொண்டொன்றை வாக்குவாதத்தில் வெல்பவரே" என்னும் வாக்கியமே இதற்குப் பிரமாண மெனவுங் கூறுநிற்பர்.)

இதனை விசாரித்துழிக் கேவலம் அசங்கத முண்டாகுந் தன்மையேயன்றி யுண்மை யொன்றும் பயவாமையை யீண்டு பிரவசனிப்பாம். சமயங்களாறும் ஒன்றை யொன்று அழித்தல் யாண்டமையும்? யாவும் பரிபாகத்தளவாய்ச் சீவர்களுக்குப் பெருமான் விதித்த வாணையாகையால், பௌதிகான்மவாதி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில் அபிருசியுண்டாகி அவன் அதை யவலம்பிக்கையில் அதிலவனுக்குள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல் திண்ணமாகையால், அவன் அதற்கு மேலிட்ட உத்தம சித்தாந்தத்தை யெவ்வளவு பிரத்தியட்சமாக மேலோர் விளக்கிய காலத்தும் அவன்

ன் அங்கீகரிப்பான்? அவன் உத்தம பரிபாகியல்லாமையால். அவனுடைய தாழ்ந்தபரிபாகம் அத்ததியில் அவனுடை கோளுக்கு, முன்னே யெத்திறத் துசிதமுடிபுகளும் அநுசிதமெனச்காட்டித் தன் வசத்தினிறுத்தும் வல்லபம் பூட்டியங்கு முண்மையால். அப்படியே, பரசிவசித்தாந்தி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில் அபிருசியுண்டாகி அவன் அதை யவலம்பிகையில் அதில் அவனுக்குள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல திண்ணமாகையால் அவன் அதற்குக் கீழிட்ட அதமசித்தாந்தங்களை ஆபாசமெனக்கண்டு கழித்தவுண்மையால் அவற்றை அவன் ஏன் அங்கீகரிப்பான்? அவன் உத்தமபரிபாகியாகையால். அவனுடைய உத்தமபரிபாகம் அத்ததியில் அவனுடைய கோளுக்குமுன்னே யெல்லாமத வாபாசங்களையு மினிது விளக்கிக் காட்டுந்தன்மை யுண்மையால். இதனுல் அதமாதமமான அதிகாரி யொருவனும், உத்தமோத்தமமான அதிகாரி யொருவனுமாக இருவர் ஏற்பட்டனர். இருவர்க்குங் கன்மவேறுபாடுகள் வெளியான வுண்மையால். இவர்க்கிடையே அநந்தவிதமான அதமராசிகளும், உத்தமராசிகளுமாகிய பரிபாகிகள் பலருளராக வெளிப்படுகின்றனர். இன்ன பரிபாகங்களொருவனுக்கே யென்பதுமுண்மை. நேற்றுத்தேகான்மவாதியா யிருந்தவன் இன்று ஏகான்மவாதியாகக் காணுமநுபவவுண்மையால். கேவலம் அதமாதமனுகவும், அதமராசிகளில் சேருபவனுகவும், உத்தமராசிகளில் சேருபவனுகவும், கேவலம் உத்தமோத்தமனுகவும், பல்வேறு தானவேறுபாடுகளை அடைகின்றவன் தேவதத்த னொருவனேயன்றி யெண்ணில் கோடியுயிர்களுளவென்னு முண்மையால் அன்னோர் பரிபாகத்தளவாய் அவர்களுக் குபகாரமாகவே யெல்லா வதமங்களும், எல்லா வுத்தமங்களும் எக்காலத்திலு நிலைபெற்றிருத்தல் அத்தியாவசியமாதல் பெறப்படுகின்றது. இந்தவிசாரத்தால் ஓர்காலத்திலும் ஓர்மதத்தால் மற்றொருமதம் அழிந்ததென்பது சர்வாபத்த மெனவறிக. எல்லாமதங்களும் நசித்துச் சைவமொன்றே யோர்காலத்தில் நிலைபெற்றிருந்தது எனின், அக்காலத்தில் உலகமடங்கலும் சிவனை வழிபடும் புண்ணிய மேலிட்டவர்களாகவே கொள்ளவரும். ஆகவே, கீழிட்ட பரிபாகத்தையுடைய வுயிர்களுக்கு அபாவஞ்சொல்லவரும். கீழிட்ட அதிகாரிகளுண்டாகப் பெறுமையுண்மையேல், இப்போது நானுவிதமான கீழிட்டபரிபாகிகளுளராதலிழுக்காம். இப்படியே பாஞ்சராத்திரமுதலியன மற்றை மதங்களை யழித்துத் தனித்தனி யொவ்வோர் காலங்களில் நிலைபெற்

றிருந்தனவெனின், அழிந்து முதலற்றுப்போன வம்மதங்கள் மீண்டும் எப்படி முளைத்துத் தழைக்கக்கூடும்? இதனால் எந்த மதமும் ஒன்றாலொன்றழிந்த தென்பது சர்வாபத்தமாம். ஒருமதத்தான் மற்றொருமதம் கெடாமல் யாவும் நிலைப்பதனால் எல்லாம சமமரியாதையுடையனவுமன்றாம். இந்த விசாரத்தால் சமயங்களொற்றையொன்று வென்றனவென்றும். ஒன்றுக்கொன்று தோற்றனவென்றுங் கூறுதல் கூடாமைகாண்க. விவகாரமெல்லாம் பரிபாகத்தளவில் நிற்பது வெளிப்பட்டமையால். பரிபாகம் ஏறியதும், குறைந்ததுமே சமயங்களுயர்ந்ததும், தாழ்ந்ததுமாகக் காணப்பட்டனவன்றி யோர்காலத்தும் சமயங்க ளுயரவுமாட்டா, அல்லது தாழவுமாட்டாவெனவறிக. எனவே, உயர்ந்தசமயம் உயர்ந்ததேயெனவும், தாழ்ந்தசமயம் தாழ்ந்ததேயெனவும், உயர்ந்த சமயம் தாழமாட்டாதெனவும் தாழ்ந்தசமயம் உயரமாட்டாதெனவும், உயர்ந்ததுபோலும்,தாழ்ந்ததுபோலுங் காண்பதெல்லாம் கேவலம் பிரமைமாத்திரமாக வெளிப்பட்டவாறறிக. ஒருவனுக்குக் கண்ணிலுண்டாகிய தோஷத்தால் நல்லது கெட்டதாகவும், கெட்டது நல்லதாகவும் புலப்படுமாற்றால் அவற்றை அப்படியே தனித்தனிக் கெட்டதென்றாவது, நல்லதென்றாவது கண்ணுடையார் பலரும் சொல்லயாண்டிசையும்? கண்கெடாதவர்க்கு நல்லது நல்லதாகவும், கெட்டது கெட்டதாகவும் புலப்படுதல் கூடுமேயெனின், கண்கெட்டார்பலரும் தமக்குள்ள கேட்டைப் பிறர்மேலேற்றித் தமக்குள்ளவநுபவமே யுசிதமெனவும், பிறரநுபவம் அநுசிதமெனவுங் கூறத்துணிவதால் அவரவரநுபவம் அந்தந்தமட்டிலேதானே விவகரிககற்பாலன வென்றறிக. இந்தநுட்பங்களை யறியாது ஒன்றையொன்று வென்றது என்று கூறுவது தவறாய் முடிந்தது.

இனிச் சமயங்கள்யாவும் சமமேயென்று, அவற்றுள், பரனது இச்சையால் காலத்துக்கேற்ப எதையுயர்த்தி எதைத்தாழ்த்தக்கூடுமோ அது அவரால் செய்யக்கூடுமென்றுஞ் சொல்லு மாபாசத்தை விசாரிப்பாம். சமமாயுள்ள சமயங்க ளோர்காலத்தில் எப்படி யொன்றுக்கொன்று தாழக்கூடும்? சுரர், நரர், விலங்குமுதலியவற்றுள், சுரர் எப்போதும் சுரரே! நரர்எப்போதும்நரரே! விலங்கு எப்போதும் விலங்கே! இவற்றுக்குண்டாகிய வுயர்வுதாழ்வுகள் ஒன்றுக்குறியதொன்றை யெய்தாவாம். சுரர் நரரில்தாழவாவது, விலங்கு நரரில் உயரவாவது அமைதல்யாண்டிசையும்? பரனது இச்சை யெனின் காரணமின்றியமையாது காலத்தாலெனின், கன்மத்தை யன்றிய

மையாது. ஆகவே, கன்மங்காரணமாய் உயர்தலும், தாழ்தலுமாந் தன்மை வெளிப்பட்டது. அஃதுந் தோற்றன்மாத்திரமாய் முடிதலுண்மையாம். கன்மத்தைவிட்டுக் கடவுள் ஒன்றுஞ்செய்யாராகையால் அவரிச்சையைக் காரணமாக்குதல் பிழையாம் அங்ஙனமாயின், அது பித்தர்செய்கையாய் முடிதலின். அது அப்படியேதானென வற்புறுத்திக்கூறின், பரனது இச்சையால் பரனே நாளைக்கு அபரனாதலுங்கூடும். அபரனானபிறகு மீண்டும்பரனாதல் தனதபரத்வத்தால் செல்லாமையின், தான் முதல்வனாந்தன்மையும், அமலனாந்தன்மையுங்கெடும். அன்றியும், பரனது இச்சையால் சைவம் ஓர்காலத்தில் தாழ்ந்ததெனின், அதிற்பெறப்பட்டபரனாகிய சிவன் அபகர்ஷனாதல் அங்கீகாரமாய்முடியும். இப்படியுமமையுமா? இது என்ன குழகுழப்பு ஞானம்? இந்த விசாரத்தால் பரனதிச்சையால் சைவத்தைத் தாழ்த்துவாரென்பது, வைணவத்தை யுயர்த்துவாரென்பதும், அல்லது வைணவத்தைத் தாழ்த்துவாரென்பதும், மற்றை மதங்களையுயர்த்துவாரெனபதும் கேவலம் அசங்கதமாய் முடிதல்காண்க.

இனிச் சமயாசாரிகள் புறச்சமயங்களாகிய சமணாதிகளையே தெய்விகத்தாலழித்தாரெனின், மற்றைச்சமயங்களை வாக்குவாதத்தால் யாவர்வெல்லுதல் கூடுமென்றெழுந்த கேள்வியுந் தவறுடைத்தாம். எல்லாச்சமயங்களும் ஒப்பமுடிந்த நிலையுடையவாகக் கொள்ளுங்கால் சமணாதிகளைப் புறச்சமயமென்றது பொருந்தாது. சைவம் சமயாதீதமெனக் கொண்டவர்மாத்திரமே அகச்சமயம், புறச்சமயம் என்று விவகரிக்கவிடமுண்டாமன்றி எல்லாம் சமஞானமாகக் கொள்பவர்க்கு எதுபுறச்சமயம்? எது அகச்சமயம்?

இன்னும் ஞானசம்பந்தாதிகள் தெய்விகத்தால் வென்றாரென்று அத்தெய்விகத்தை அவர்க்குவேறா யிருப்பதொரு சித்தியாகக்கூறியதுந்தவறாம். அன்னோர்தெய்வங்களாத லுண்மையாகையால். எனவே சிவவிபூதியென்பது வெளிப்படை. ஆகவே, ஸ்வசக்தியால் அவர் முடித்தாரென்பது ஒப்பமுடிந்தது. இவ்வவதாரமூர்த்திகள் புறச்சமயங்களை யழித்தாரென்னு நுட்பத்தை யாம்மேலே விளக்கியிருக்கின்றோமாகையால் மதங்களின் தோல்வி வெற்றிகளுடைய தன்மை யித்திறத்தனவென் றாகிப்பாராக.

இன்னும் மறைசொல் சட்சமயம்என்றதும் பிழையாம். வேதம் ஒன்றையொன்று விரோதிக்குஞ் சமயங்களைச் சமமரியாதை யுடையனவாகக்கொண் டுணர்த்துவதின்றாகையால், ஒவ்வொரு மதத்தையும் உடன்பாடுபோலக்கூறினும், பின்னர் மேலிட்ட சித்தாந்தங்களை நிரூபிக்குமவசரத்தில் முன்னவை பூர்வபட்சமாகும்பொருட்டு நிஷேதித்துக் கூறுந்தன்மையுண்மையால்.

ஆயின், உமாதேவியார் வளர்க்கும் முப்பத்திரண்டு அறத்தில் (அறுசமயத்தோர்க்குண்டி) என்பது மொன்றாத விழுக்காமெனின், அது சைவம், பாசுபதம், மஹாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்னுஞ் சித்தாந்தாசரண சௌபானமார்க்க மென்கையாலமையுடைத்தாதலறிக. இஃதறியாதார், சைவம், வைணவம், சாக்தேயம், காணுபத்யம், சௌரவம், காபாலிகம் என்று ஷண்மதநிரூபணஞ் செய்யாநிற்பர். இவையொன்றிலொன்று பிராம்ஹணனுக்கும், பஞ்சமனுக்குமுள்ள தாரதம்யகிரஸ்தமாய்ப்புலப்படலால், இப்படிப்பட்டவவலசித்தாந்தங்களை வேதம் ஒப்பமுடிந்ததாய்க் கொண்டுணர்த்ததெனவறிக. மேற்போந்தசைவம, பாசுபத முதலியன சிவைகநிஷ்டமாகுந் தன்மையுண்மையால், அறம் வளர்த்த அம்மையாரபிமதத்துக்கேற்ப, வேதபாஷ்யமாய் விளங்குஞ் சிவாகமத்திற் பிரதி பாதிக்கும் பெருநலங்கண்டு அறுவகைச்சமயம் என்றுவேதாவிருத்தமாய், உடனபாடாக நம்மவர் கூறி வருமரபுரிமையுங் கண்டுதெளிக. இப்படி விசாரித்தறியாது ஷண்மதம், ஷண்மதம் என்று கத்திக்கொண்டு, அச்சண்மதங்களையுஞ் சங்கராசாரியர் தாபித்தாரென்று புலம்பாநின்று குழறிவழியுங்குமதிகள் போதமுங் குணப்பாட்டின்மையாயொழிந்தது. சமயங்கள் அகச்சமயம் (சூ) புறச்சமயம் (சூ) அகப்புறச்சமயம் (சூ)புறப்புறச்சமயம்(சூ)என இருபத்துநான்குபேதத்தையடைந்திருந்தாலும், இவவிருப்பத்துநாலுக்கும், அதீதப்பட்ட சித்தாந்தமென்று அதிக்கிரமித்துப் பிரகாசித்தலாலும் யாவும் ஒரேமரியாதையுடையனவாகக் கொண்டுரைப்பது குழறு பாடாகவே முடிந்தமைகாண்க. சங்கராசாரியர் புறச்சமயம் ஆறனுளொன்றாகிய ஏகான்மவாதத்துக்கு மாத்திரமே ஆசிரியராவர். மற்றைப்புறச்சமயங்களுக்கும அவருக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாதெனவறிக. புறச்சமயங்கள்தாமே அவருடைய தாபனத்தை யங்கீகரியாதனவாக, அவற்றின்மேலாய அகப்புறச்சமயம், அகச்சமயம், அதீத சமயம் என்பவற்றிற்கு அவர் தாபனக்கர்த்தாவாதல் யாண்டிசையும்? இது கோஹத்திசெய்பவன் பிராம்ஹணகுருக்களாதல் போல்வதொன்றும். இதனால், மறைசொல் சட்சமயம் என்று ஹேயமார்க்கங்களை மதித்துரைத்தது தவறாய்முடிந்தது. அவை வேதநிஷ்டமாகிய உட்சமயம் ஆறெனக்கொள்ளின், ஒன்றையொன்று மறுப்பதவசியமன்றும். வேதவிருத்தமாகிய புறச்சமயம் ஆறெனக்கொள்ளின், மூன்றிலொன்று முரணுந்தன்மை யுண்மையால் அநாதரணியமாதல் சித்தம். ஆகவே, "எவரே யென்றுகொண்டொன்றை வாக்குவாதத்தில் வெல்பவர்" என்றதும் பிழைபட்டழிந்தமைகாண்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

(இன்னும்வரும்.)

வைதிகசைவசித்தாந்த சண்டமாருதம்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1915ஸ் செப்டம்பர்மீ வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூபா. | அ | ப | செலவு. | தொகை. ரூபா. | அ | ப |
|---|---|---|---|---|---|---|---|
| 1915ஸ் செப்டம்பர்மீ 1உ இருப்பு | 662 | 7 | 8 | அச்சுக்கூடத்திற்கு முன்பணம் | 10 | 0 | 0 |
| சமாசிகர் வருடச்சந்தா | 8 | 9 | 0 | லிகிதர் சம்பளம் | 20 | 0 | 0 |
| பழையபிரதிகள் விக்கிரயம் | 3 | 12 | 0 | உத்தியோக சாலையின் குடிக்கூலி | 4 | 0 | 0 |
| காரியதரிசியினிடமிருந்து (Permanent advance) | 20 | 0 | 0 | ஆகஸ்டுமாத சஞ்சிகை வெளிவரக் காகிதம், அச்சுக்கூலி ... ... | 35 | 13 | 0 |
| விளம்பரம் வரவு | 1 | 4 | 0 | தபால் செலவு ... | 14 | 11 | 3 |
| வட்டி | 7 | 0 | 0 | வண்டி சத்தம் ... | 0 | 11 | 6 |
| | | | | காகிதம், மை, பிசின் முதலியன | 2 | 7 | 2 |
| | | | | காரியதரிசிக்கு (P. advance) | 20 | 0 | 0 |
| | | | | லிகிதர் கூடலூருக்குப்போக முன்பணம் | 4 | 0 | 0 |
| | | | | மெழுக்குவத்தி விளக்கு | 1 | 12 | 0 |
| | | | | | 113 | 6 | 11 |
| *ஆயுள் சாமாசிகர் சந்தா. ரூ 271-4-0 | | | | கையிருப்பு | 589 | 9 | 9 |
| ஆக மொத்தம். | 703 | 0 | 8 | ஆக மொத்தம் | 703 | 0 | 8 |

*ஜூன்மாதத்திய வரவுசெலவு கணக்கில் சாமாசிகர்வருடசந்தாவில் ஆயுள்சாமாசிகர் சந்தா 1-4 0 சேர்க்கப்பட்டிருக்கிறது.

K. Kuppusawmy Mudaliar, *Secretary.*

A. Somasundram Pillay, *Auditor.*

W T. Govindaraja Mudaliar, *Treasurer.*